# மரங்கள் சாய்ந்த காரணத்தை மாநகர் மன்றம் விசாரணை செய்கிறது!



நமது நிருபர்

கோலாலம்பூர், ஜன.18–

ஜாலான் புடு, மெர்னம் கட்டடத்தின் முன்புறத்திலுள்ள 35 ஆண்டுகளுக்கும் மேலான மரங்கள் வேர் அழுகிச் சாய்ந்து விட்டன. அதற்கான உண்மையான காரணம் கண்டறியப்படும் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது. கடந்த வியாழக்கிழமை காலை 10.40 மணிக்கு மரங்கள் சாய்ந்ததில் அச்சாலையின் இரு புறமும் மூடப்பட்டன. இச்சம்பவத்தினால் காரில் பயணித்த 2 பெண்களுக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டதில் மேல் சிகிச்சைக்கு கோலாலம்பூர் மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன்பாகத் தீயணைப்பு மீட்புத் துறை பணியாளரிடமிருந்து தொடக்கக்கட்ட சிகிச்சையைப் பெற்றனர். இதில் சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் துறை, அமலாக்கத் துறை, இயந்திர பொறியியல் துறையைச் சேர்ந்த மாநகர் மன்றத்தின் 40 ஊழியர்கள் பங்கேற்றனர். மரங்களை அகற்றும் நடவடிக்கை பிற்பகல் 2.00 மணிக்கு முழுமையாக நிறைவடைந்ததில் அப்பாதை பயனீட்டாளர்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டது. இந்த சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் மலேசியத் தீயணைப்பு மீட்புத் துறை, மலேசியத் தற்காப்புப் படை, தேசிய போலீஸ் படையைச் சேர்ந்தவர்களும் இணைந்து செயல்பட்டதாக ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.